16.10.2025



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.249/2021**

**வா.சா. 1–குமார், த/பெ. மாணிக்கம்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய இடத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து சாலை அமைத்துள்ளதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் நான் எத்தனை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சாட்சி வழக்குரையை பார்த்துவிட்டு என்ன பரிகாரத்திற்காக வழக்கு செய்துள்ளேன் என்று தெரியாது என்று கூறுகிறார், எனக்கு அரைகுரையாக தமிழ் படிக்க தெரியும் என்று கூறுகிறார்.

நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் வழக்குரையில் கோரியுள்ள பரிகாரத்தை குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்த வழக்குரையில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன், ஆனால் நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் விளம்புகை பரிகாரத்தை விட்டுவிட்டு வெறும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் தான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

16.10.2025



தாவா சொத்தின் சர்வே எண்.392/6 ஆகும். சர்வே எண் 822/26 என்பது புதிய சர்வே எண்ணாகும். தாவா சொத்து வருவாய் துறை வகைபாட்டில் நத்தம் என வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் ஆரம்பத்தில் காளியப்பன் என்பவர் தான் அனுபவத்தில் இருந்தார், அதன்பிறகு மருதை என்பவர் அனுபவத்தில் இருந்தார்.

நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் ஆரம்பத்தில் தாய்வழி பாட்டி தைலம்மை என்பவர் ஆதியில் அனுபவத்தில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இவ்வாறு தைலம்மை தாவா சொத்தில் அனுபவம் செய்ததற்கு வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன், என்னென்ன ஆவணங்கள் என்றால் சாட்சி தாவா சொத்து பூர்வீகம் என்பதால் எனக்கு ஆவணம் இல்லை என்று கூறுகிறார். தற்போது தாவா சொத்து பூர்வீகம் சொத்து என கூறுகிறீர்களா என்றால் ஆமாம்.

தைலம்மை ஒரே வாரிசு காளியப்பன் என்று சொன்னால் சரிதான். காளியப்பன் தைலம்மைக்கு என்ன உறவுமுறை என்றால் நான் கேள்விபட்ட வகையில் மகன் என்று என் முன்னோர்கள் எனக்கு சொன்னார்கள். தைலம்மைக்கு

16.10.2025



காளியப்பன் வாரிசு என்று காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காளியப்பனுக்கு எத்தனை வாரிசு என்று எனக்கு தெரியாது. ஆனால் மருதமுத்து வாரிசு என தெரியும். இவ்வழக்கில் நான் வம்சாவளி கொடிபட்டியலில் யார் யார் வாரிசு என்று நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் வம்சாவளி கொடிபட்டியலில் உள்ள சங்கதிகள் எல்லாம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.